Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், பிப்ரவரி 13, 2025 | இதழ் 306

# பிரதமரும் பிரான்ஸ் அதிபரும் கூட்டாக ஐடிஇஆர் அணுஉலையைப் பார்வையிட்டனர்

சென்னை, 13 பிப்ரவரி 2025: பிரதமர் திரு நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் திரு இம்மானுவேல் மக்ரோனும் இன்று கடராச்சியில் உள்ள சர்வதேச வெப்ப அணுக்கரு பரிசோதனை உலையை (ஐடிஇஆர்) கூட்டாகப் பார்வையிட்டனர். தலைவர்களை ஐடிஇஆர் தலைமை இயக்குநர் வரவேற்றார். இன்று உலகின் மிகவும் லட்சிய அணுக்கரு இணைவு எரிசக்தி திட்டங்களில் ஒன்றான ஐடிஇஆர்-க்கு எந்தவொரு நாட்டின் தலைவரோ அல்லது அரசாங்கத் தலைவரோ வருகை தருவது இதுவே முதல் முறையாகும்.

இந்த வருகையின் போது, உலகின் மிகப் பெரிய டோகோமாக்கின் அசெம்பிளி உட்பட, எரியும் பிளாஸ்மாவை உருவாக்குதல், உள்ளடக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் மூலம் இறுதியில் 500 மெகாவாட் இணைவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதை தலைவர்கள் பாராட்டினர். திட்டத்தில் பணிபுரியும் ஐடிஇஆர் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பையும் தலைவர்கள் பாராட்டினர்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தத் திட்டத்திற்கு பங்களிக்கும் ஏழு ஐடிஇஆர் உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாகும். சுமார் 200 இந்திய விஞ்ஞானிகள், எல் அண்ட் டி, ஐனாக்ஸ் இந்தியா, டிசிஎஸ், டிசிஇ, எச்சிஎல் டெக்னாலஜிஸ் போன்ற குறிப்பிடத்தக்க தொழில்துறை நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஐடிஇஆர் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தேசிய வர்த்தகர்கள் நல வாரியத்தின் 5-வது கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது

சென்னை, 13 பிப்ரவரி 2025: தேசிய வர்த்தகர்கள் நல வாரியத்தின் (ழிஜிகீஙி) 5-வது கூட்டம் 2025-ம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று புது தில்லி வணிஜ்யா வளாகத்தில் அதன் தலைவர் திரு சுனில் ஜே. சிங்கி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 2025-26-ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் வாரியத்தின் நோக்கங்களை நிறைவேற்றவும், சிறு வணிகர்கள், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் நலனுக்காகவும் மத்திய அரசு மேற்கொண்டு வரும் முக்கிய நடவடிக்கைகள் குறித்து தேசிய வர்த்தகர்கள் நலவாரியத்தின் தலைவர் திரு சுனில் ஜே.சிங்கி, எடுத்துரைத்தார். உறுப்பினர்கள் மற்றும் வர்த்தக சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களது கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சில்லறை வர்த்தகம் தொடர்பான நலத் திட்டங்கள் அனைவரையும் சென்றடையவும் அவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் உறுப்பினர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். குழு உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட முக்கிய ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் வாரியத்தின் நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசின் ஒன்பது அமைச்சகங்கள் / துறைகளின் பதவி வழி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பிரதமரின் இல்லந்தோறும் இலவச சூர்யமின் உற்பத்தி திட்டத்தின் ஓராண்டு நிறைவு



சென்னை, 13 பிப்ரவரி 2025: பிரதமரின் இல்லந்தோறும் இலவச சூர்யமின் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டு 2025 பிப்ரவரி 13 அன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது. இது குறைந்த கட்டணத்தில் சூரிய மின்சக்தியுடன் கூடிய வீடுகளை கட்டவும் அவற்றை மேம்படுத்தி, நிலையான எதிர்காலத்திற்கான இந்தியாவின் மாற்றத்தை துரிதப்படுத்திய ஒரு ஆண்டைக் கொண்டாடுகிறது. 2024 பிப்ரவரி 13, அன்று பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட இந்தப் புதிய முயற்சி, வீடுகளில் சூரிய மின்சக்தி உற்பத்தி தகடுகளை நிறுவுவதன் மூலம் வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகின் மிகப்பெரிய முயற்சியான இத்திட்டம், 2027 மார்ச் மாதத்திற்குள் ஒரு கோடி வீடுகளுக்கு சூரிய மின்சக்தி வழங்குவதற்கான தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தப்படுகிறது.

2025 ஜனவரி 27 வரை, இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்கனவே 8.46 லட்சம் வீடுகளில் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மாதாந்திர நிறுவல் விகிதம் பத்து மடங்கு அதிகரித்து சுமார் 70,000 மின் தகடுகள் நிறுவப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு 40% வரை மானியம் அளிக்கப்படுகிறது. இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மிகவும் குறைந்த கட்டணத்துடனும் அணுகக்கூடிய தாகவும் மாற்றுகிறது. இதுவரை, 5.54 லட்சம் குடியிருப்பு நுகர்வோருக்கு ரூ.4,308.66 கோடி மத்திய நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. சராசரியாக ஒரு வீட்டிற்கு ரூ.77,800 மானியம் வழங்கப்படுகிறது. கூடுதலாக, பயனாளிகளில் 45% பேருக்கு தற்போது அவர்களின் சூரிய மின் உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பொறுத்து பூஜ்ஜியம் என்ற அளவில் தான் அவர்களுக்கு மின்சாரக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.

வீடுகளுக்கான இலவச மின்சாரம்: இந்தத் திட்டம் மானிய விலையில் வீடுகளில் சூரிய மின் உற்பத்தி தகடுகளை நிறுவுவதன் மூலம் இலவச மின்சாரத்தை வழங்குகிறது. இது எரிசக்திக்கான செலவுகளைக் கணிசமாகக் குறைக்கிறது.

அரசுக்கு ஏற்பட்டுள்ள குறைந்த மின்சார செலவுகள்: சூரிய சக்தியின் பரவலான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம், இந்தத் திட்டம் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.75,000 கோடி மின்சாரச் செலவை சேமிக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அதிகரித்த பயன்பாடு: இந்தத் திட்டம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிக்கிறது. இது இந்தியாவில் மிகவும் நிலையான மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த எரிசக்தி கலவையை உருவாக்க பங்களிக்கிறது.

குறைக்கப்பட்ட கரியமில வாயு உமிழ்வு: இந்தத் திட்டத்தின் கீழ் சூரிய சக்திக்கு மாறுவது கரியமில வாயு உமிழ்வைக் குறைக்க உதவும். இது இந்தியாவின் கரியமில வாயு உமிழ்வை குறைப்பதற்கான உறுதிப்பாட்டை ஆதரிப்பதாக அமையும்.

மானிய விண்ணப்பம் மற்றும் விற்பனையாளர் தேர்வு: குடும்பங்கள் தேசிய இணையதளம் மூலம் மானியத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதில் அவர்கள் சூரிய மின்சக்தி உற்பத்தி தகடுகளை நிறுவுவதற்கு பொருத்தமான விற்பனையாளரையும் தேர்ந்தெடுக்கலாம்.

# தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள்: 24 ந்தேதி ஸ்டாலின் துவக்குகிறார் - சென்னையில் 33 இடங்களில் திறப்பு




சென்னை, 13 பிப்ரவரி 2025: கடந்த ஆண்டு சுதந்திர தின விழாவின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை எளியோருக்கு, சிறப்பான சிகிச்சைகளும், தரமான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நடுத்தரக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதால், இவர்களுக்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக, பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் இவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், ‘முதல்வர் மருந்தகம்’ என்ற புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் என்று அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து முதல்வர் மருந்தகம் அமைக்க பி.பார்ம் அல்லது டி.பார்ம் சான்று பெற்றவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் மருந்தகம் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் கூட்டுறவுத்துறை மூலமாக www.mudhalvarmarunthagam.tn.gov.in என்ற இணைய தளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

840 பேருக்கு அனுமதி - இதனைத் தொடர்ந்து விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதுவரை 2 ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்துள்ளதாக தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை முதல்வர் மருந்தகம் அமைக்க மொத்தமாக 840 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் முதல்வர் மருந்தகம் அமைக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் 110 சதுர அடிக்கு குறையாமல் சொந்த இடம் அல்லது வாடகை இடம் இருக்க வேண்டும். ஒருவேளை சொந்த இடமாக இருந்தாலும், அதற்கான சான்றிதழ் மற்றும் சொத்து வரி ரசீது அல்லது மின் இணைப்பு ரசீது உள்ளிட்டவற்றை சமர்ப்பிக்க வேண்டும். வாடகை இடமாக இருந்தால், உரிமையாளர்களிடம் வாடகை ஒப்பந்தப் பத்திரம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டு கொள்ளப்பட்டிருந்தது.

சென்னையில் 33 இடங்களில் - இந்நிலையில் வரும் 24 ந்தேதியன்று தமிழ்நாடு முழுவதும் 1,000 முதல்வர் மருந்தங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொளத்தூர், தி.நகர், ஆழ்வார்பேட்டை உட்பட சென்னையில் மட்டும் 33 இடங்களில் முதல்வர் மருந்தகம் அமைக்கப்பட உள்ளது.

முதல்வர் மருந்தகம் அமைக்கும் தொழில் முனைவோருக்கு அரசு மானியமாக ரூ.3 லட்சம் இருதவணைகளாக ரொக்கமாகவும், மருந்துகளாகவும் கொடுக்கப்படும். அவர்களுக்கு கூடுதல் நிதி தேவைப்படும் நிலையில், கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்பெற வழிவகை செய்து கொடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளித்த பின் மானியத் தொகை ரூ.1.50 லட்சம் விடுவிக்கப்படும். இதன்பின் ரூ.1.50 லட்சத்திற்கு மருந்துகள் அளிக்கப்படும். அதேபோல் விற்பனைக்கு ஏற்றவாறு ஊக்கத்தொகை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த மருந்தகங்கள் மூலமாக மக்கள் மருந்துகளை குறைந்த விலையில் வாங்கலாம்.

முதல்வர் மருந்தகத்திற்கு தேவையான ஜெனரிக் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள் முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். மருத்துவம் சார்ந்த இதர மருத்துவ உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்காப்ஸ், டாம்கால் மற்றும் யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ராசூட்டிக்கல்ஸ் உள்ளிட்ட மருந்து வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் ரூ.7,375 கோடிக்கான புதிய தொழில் முதலீடுகள்: அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் 19 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்




சென்னை, 13 பிப்ரவரி 2025: தமிழகத்தில், 19 ஆயிரம் பேருக்கான வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் ரூ.7 ஆயிரத்து 375 கோடிக்கான புதிய முதலீடுகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டசபை கூட்டத்தொடர் வரும் மார்ச் முதல் வாரத்தில் கூட உள்ளதாக தெரிகிறது. அப்போது தமிழக அரசின் பட்ஜெட் (நிதிநிலை அறிக்கை) தாக்கல் செய்யப்பட உள்ளது. இதை முன்னிட்டு நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூடியது.

அந்த கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. பட்ஜெட்டுக்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்கியுள்ளது. அதோடு, பல இடங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆட்சேபனையற்ற பகுதிகளில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கவும் அமைச்சரவை அனுமதி அளித்தது. அதோடு மேலும் சில தொழில் முதலீடுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் புதிய தொழில் முதலீடுகளும், தொழில் விரிவாக்கத்துக்கான முதலீடுகளும் அடங்கும். அந்த வகையில் ரூ.7 ஆயிரத்து 375 கோடி மதிப்பிலான தொழில் முதலீடுகளுக்கு அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் கிடைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உலகளாவிய திறன் மையங்கள், தோல் அல்லாத காலணி உற்பத்தி, உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட தொழில் முதலீடுகள் வேலூர், தூத்துக்குடி, திருச்சி, பெரம்லூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அமைய உள்ளதாக கூறப்படுகிறது. அதன் மூலம் 19 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் அரசு வட்டார தகவல்கள்கூறுகின்றன

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வியாழன்,
பிப்ரவரி 13, 2025

# தனைரா மற்றும் ஜே ஜே ஆக்டிவ் வழங்கும் மகத்தான புடவை ஓட்டம் நிகழ்ச்சி சென்னையில் நடைபெறுகிறது - பெண்மை, உறுதி மற்றும் பண்பாட்டு பெருமையைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சி



சென்னை 13, பிப்ரவரி 2025: டாடாவின் தயாரிப்பான தனைரா, பெங்களூரைச் சேர்ந்த பிட்னஸ் நிறுவனமான ஜே ஜே ஆக்டிவ் உடன் சேர்ந்து சென்னையில் இந்த ஞாயிற்றுக்கிழமை பெண்கள் புடவை அணிந்தபடி, உயிர்துடிப்பு மிக்க அதிகாலை ஓட்டத்தில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஒன்றை ஒருங்கிணைத்துள்ளது. சென்னை நகரம் முழுவதுமுள்ள யெண்கள் கலைநயமிக்க சேலைகளை அணிந்து நொளம்பூரில் கூடி இந்த ஓட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பெண்மை, உடல் திறன் மற்றும் சுதந்திரத்துக்கான அர்ப்பணிப்பாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சென்னை தனைரா புடவை ஓட்டம் [சென்னை சாப்டர் ஆஃப் தனைரா சேரீ ரன் ]நிகழ்ச்சியை தனைராவின் யூலைமைச் செயல் அதிகாரியான திரு. அம்புஜ் நாராயணன் [சிஇஓ ஆஃப் தனைரா] கொடியசைத்துத் துவக்கிவைத்தார். அவருடன் ஜே ஜே ஆக்டிவின் பயிற்சியாளர் ப்ரமோத்தும் [கோச் பிரமோத், ஜே ஜே ஆக்டிவ்] உடனிருந்தார்.

பாரம்பரியத்தையும் நவீனத்தையும் கொண்டாடும் உயிர்ப்பு மிக்க கொண்டாட்டம் தனைரா புடவை ஓட்டம் [தனைரா சேரீ ரன்]. இந்த ஓட்ட நிகழ்வில் சமகால லட்சியங்களுடன், மகத்தான நம்முடைய மரபு அழகுற இணைகிறது. நவீனகால பெண்கள் பெண்மையின் வலுவை கம்பீரத்துடன் சமநிலையுடன் பேணுகிறார்களோ அப்படியாக புடவையை ஒரு உடையாக மட்டுமின்றி அவகளது ஆளுமையின், அடையாளத்தின், தன்னிறைவின், சுய வெளிப்பாட்டின் சின்னமாகவும் புடவை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

இந்த தனித்துவம் கொண்ட ஓட்ட நிகழ்ச்சி, சேலையின் ஆறு அடிகள் சம்பிரதாயக் கட்டுகளோடு பெண்ணை நிறுத்தவில்லை என்பதை நிரூபிக்கிறது. அவளை ஆற்றலுடன் இன்றைய உலகத்தின் மாறுதல்களுக்கேற்ப வாழ்க்கைப் பயணத்தில் ஓட வைக்கிறதென்பதையும் தெரிவிக்கும் நிகழ்வாகும்.

புனே, பெங்களூரு, ஐதராபாத், கோல்கத்தா, அஹமதாபாத்தைத் தொடர்ந்து சென்னையில் நடைபெறும் புடவை ஓட்ட நிகழ்ச்சி பெண்களிடையே கூடுதல் அன்பையும் உறவையும் ஏற்படுத்தியுள்ளது. மன உறுதி மற்றும் பன்முகத் தன்மையின் தைரியமான அறிக்கையாக புடவையை இந்த ஓட்ட நிகழ்ச்சிகள் மாற்றியுள்ளன.

இந்த நிகழ்ச்சி பெற்றி தனைராவின் தலைமைச் செயல் அதிகாரியான அம்புஜ் நாராயண் [சிஇஓ, தனைரா] பேசும்போது, “தனைரா புடவை ஓட்ட நிகழ்ச்சி பெண்மைக்கும் உடல் திறனுக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சி ஆகும். நளினம் மற்றும் மன உறுதிக்கு அடையாளமாக விளங்கக் கூடிய புடவையைக் கொண்டாடும் வகையில் வலுவான, நவீன பெண்கள் அதை அணிகிறார்கள். இந்த ஓட்ட நிகழ்ச்சியின் வழியாக புடவை தொடர்பான பார்வைகளை மாற்ற விரும்புகிறோம்.

பெண்மையின் வலு மற்றும் பன்முகத் தன்மையின் அடையாளமாக புடவையை மறுவரையறை செய்யும் நிகழ்ச்சி இது. ஜே ஜே ஆக்டிவ் உடனான எங்களது கூட்டு செயல்பாடு இந்தப் பார்வையை வலுப்படுத்தி, இன்றைய வாழ்க்கை முறைகளுக்கு சேலை எப்படிப் பொருந்துகிறதென்பதைக் காட்டுகிறது. பண்பாட்டுக்கும் செயல்வேகத்துக்கும் அடையாளமான சென்னை நகரத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது அதை உறுதிப் படுத்துவதற்கே.”

ஜே ஜே ஆக்டிவ்வின் பயிற்சியாளர் பிரமோத் பேசும்போது, “தங்கள் குடும்பத்தின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றும் பெண்களுக்கு தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதற்கு குறைந்த நேரமே உள்ளது. யூநைரா புடவை ஓட்ட நிகழ்வு, பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தை சௌகரியமான பாதுகாப்பான சூழலில் முன்னிலைப்படுத்துவதற்கு ஞாபகமூட்டும் நிகழ்ச்சியாகும்.

வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்களை வென்ற பெண்கள் தங்கள் கதைகளை சக பெண்களுக்குக் கூறி அவர்களை உற்சாகமூட்டும் நிகழ்ச்சியும் இது. தனைரா புடவை ஓட்ட நிகழ்வை நடத்தும் இந்தியாவின் ஆறாவது நகரம் சென்னை. தங்களைத் தன்னிறைவாக்கும் இயக்கத்தில் உற்சாகத்துடன் ஈடுபடுத்திக் கொண்ட சென்னை பெண்களின் அளப்பறிய உற்சாகத்தைப் பார்த்ததில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி.”

# தமிழ்நாடு முழுக்க திமுகவிற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; “புரோ இன்கம்பென்சி” தான் எங்கும் எதிரொலிக்கிறது. - மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எக்ஸ் தளத்தில் பதிவு.

சென்னை, 13 பிப்ரவரி 2025: நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல், மக்கள் நலனுக்காக அனுதினமும் உழைத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழைப்பிற்கும், திராவிட மாடல் அரசுக்கும், பெரியாரை இகழ்ந்து அரசியல் செய்ய நினைத்த அற்ப பதர்களை ஓடவிட்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி!

குரங்கு கையில் சிக்கிய பூமாலையாய் தன் கைக்கு கிடைத்த கட்சியை சீரழித்து சின்னாபின்னமாக்கி தோல்வி மேல் தோல்வி கண்டு தோல்விசாமி அவர்கள் இல்லாத பொய்களை வீசுவதே அன்றாட அலுவலாக வைத்திருக்கிறார். அதனால்தான் மக்களை சந்திக்க முடியாமலும் திமுகழகத்தை எதிர்க்க துணிவில்லாமல் தேர்தலை சந்திக்காமல் ஓடி ஒளிந்துக் கொண்டார்.

வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல் வாக்களிக்காத மக்களின் நலனுக்காகவும் இந்த அரசு பாடுபடும் என அறிவித்து செயல்பட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; அதன் காரணமாக இன்று ஈரோடு கிழக்கில் அதிமுக வாக்குகள் அனைத்தும் திமுக விற்கு வந்துள்ளது.

தமிழ்நாடு முழுக்க திமுகவிற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; “புரோ இன்கம்பென்சி” தான் எங்கும் எதிரொலிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் அலைதான் தமிழ்நாடு முழுக்க அடித்துக் கொண்டிருகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்!

# புளியந்தோப்பு பகுதியில் ஒருவரை கத்தியால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட நபர் கைது.

சென்னை, 13 பிப்ரவரி 2025: சென்னை, அயனாவரம், மேட்டு தெருவில் அமீதுல்லா, வ/29, த/பெ.ஜப்பார் ஷெரிப், என்பவர் வசித்து வருகிறார். இவரும் ஓட்டேரி பகுதியைச் சேர்ந்த அக்பர் அலி பசுலும் நண்பர்கள் ஆவர். இருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சேர்ந்து மது அருந்தும் போது அமீதுல்லா, அக்பர் அலி பசுலுவை அடித்துள்ளார். இதனால் கோபமடைந்த அக்பர் அலி பசுலு மேற்படி அமீதுல்லாவிடம் சமாதானம் பேச வேண்டும் என கூறி 09.02.2025 அன்று இரவு புளியந்தோப்பு திரு.வி.க நகர் பகுதியில் உள்ள நண்பர் வீட்டுக்கு அழைத்துச் சென்று சமாதானம் பேசிவிட்டு இருவரும் அங்கு தூங்கியுள்ளனர். மறுநாள் 10.02.2025 அன்று காலை அமீதுல்லா வீட்டிற்கு செல்வதாக கூறிய போது, மேற்படி அக்பர் அலி பசுலு வீண் தகராறு செய்து அமீதுல்லாவை கத்தியால் தாக்கி உள்ளார். தாக்குதலில் இரத்த காயமடைந்த அமீதுல்லா மருத்துவ மனையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து பி-1 புளியந்தோப்பு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கொலைமுயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட அக்பர் அலி பசுலு, வ/21, த/பெ.ஷபீர், ஓட்டேரி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப் பட்டது.விசாரணைக்குப்பின்னர் அக்பர் அலி பசுலு 10.02.2025 அன்று சிதிமன்றத்தில் அஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# எதிர்காலத் தயாராக இருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான பாதையை அமைக்கின்ற இவால்வ் இன் 9வது நிகழ்வை சென்னையில் ஆக்சிஸ் பேங்க் நடத்துகிறது




சென்னை, 13 பிப்ரவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கிகளில் ஒன்றான ஆக்சிஸ் பேங்க், அதன் முதன்மையான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (எம்எஸ்எம்இஸ்) அறிவுப் பகிர்வு கருத்தரங்கான இவால்வ் இன் 9வது நிகழ்வை சென்னையில் நடத்தியது. 'வணிகத்தின் புதிய யுகத்திற்கு குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை எதிர்கால பாதுகாப்பானதாக்குதல்' என்ற இவால்வ் இன் 9வது நிகழ்வுக்கான கருப்பொருள் வளர்ந்து வரும் வணிக சூழலில் புதுமை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் செயல்பாட்டு நெகிழ்தன்மை ஆகியவற்றைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இந்த கருத்தரங்கில் ஆக்சிஸ் பேங்க் இன் துணை நிர்வாக இயக்குநர் திரு.ராஜீவ் ஆனந்த், ஆக்சிஸ் பேங்க் இன் வணிக வங்கிக் குழுமத்தின் தலைவர் திரு.விஜய் ஷெட்டி மற்றும் ஆக்சிஸ் பேங்க் இன் கருவூலச் சந்தை விற்பனை செயல் துணைத் தலைவர் ப்ரெஜேஷ் சாலில் மற்றும் ஆக்சிஸ் பேங்க் இன் மிட் கார்ப்பரேட் & மீடியம் என்டர்ப்ரைசஸ் தலைவர் திரு. பிரசாந்த் தி.எஸ். மற்றும் ஆக்சிஸ் பேங்க் இன் கிளை வங்கி-மண்டல விநியோகம் தெற்கு 2 நிர்வாக துணைத் தலைவர் மற்றும் தலைவர் நூடி சக்கரவர்த்தி ஆகியோர் உரையாற்றினர். இந்த குழு விவாதத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பகிர்ந்த பத்மஸ்ரீ ரஃபீக் அஹமது மெக்கா, தலைவர், ஃபரிதா குழுமம், திரு. விஜய் ஷெத், நிர்வாக இயக்குநர், உர்மிலா எண்டர்பிரைஸ் மற்றும் திரு. ராஜேந்திரன் சபநாயகம், நிர்வாக இயக்குநர், சுமங்கலா ஸ்டீல் லிமிடெட் போன்ற முக்கிய விவாதக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் இருந்து 100 க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்களின் பங்கேற்ப்பைக் கண்டது.

இந்த அறிவுப் பகிர்வு முயற்சியின் மூலம், ஆக்சிஸ் பேங்க் தொழில்முனைவோர்களுக்கு செயல்பாடுகளை திறம்பட சீர்படுத்துதல், போட்டித்திறனை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் சந்தை இருப்பை விரிவுபடுத்துதல் போன்ற தீர்வுகளை வழங்கும். இந்த கருத்தரங்கு சந்தை வீழ்ச்சிகளை நம்பிக்கையுடன் சமாளிப்பதற்கு குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுகின்ற டிஜிட்டல் மாற்றம், செயல்பாட்டு திறன் மற்றும் புது-யுக வணிக மூலோபாயங்கள் ஆகியவற்றுள் நிஜ உலக நுண்ணறிவுகளை வழங்கும். இந்த கருத்துரு, அர்த்தமுள்ள மற்றும் புதுமையான ஒத்துழைப்புகள் மூலம் ஒரு எதிர்காலத்திற்கு தயாரான இந்தியாவை உருவாக்கும் ஆக்சிஸ் பேங்க் இன் பரந்த தொலை நோக்குடன் சூத்துப்போகிறது.

இந்த நிகழ்ச்சி பற்றி பேசிய ஆக்சிஸ் பேங்க் இன் துணை நிர்வாக இயக்குநர் திரு. ராஜீவ் ஆனந்த் கூறுகையில், "மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கை உருவாக்குகின்ற மற்றும் மில்லியன் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கின்றன. ஆக்சிஸ் பேங்க் இல் எங்களை ஒரு நிதி சேவை வழங்குநராக மட்டுமல்லாமல், எம்எஸ்எம் களுக்கு அவர்களின் வணிகங்களை எதிர்காலத்திற்கு பாதுகாக்க தேவையான கருவிகள், நுண்ணறிவுகள் மற்றும் ஆதரவை வழங்கும் ஒரு வினையூக்கியாக நாங்கள் பார்க்கிறோம். இந்த தளம் பாரம்பரிய வங்கியியலைத் தாண்டி, வணிகங்கள் நவீன புதுமைகளை ஆராயவும், தொழில் தலைவர்களுடன் ஒத்துழைக்கவும், மாறிவரும் உலகளாவிய சந்தைக்கு ஏற்ப தங்கள் நெகிழ்வுத்திறனை வலுப்படுத்தவுமான ஒரு சுற்றுச்சூழலை ஊக்குவிக்கிறது. ஆக்சிஸ் பேங்க், குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் தோளோடு தோள் நின்று, அவர்களின் அபிலாஷைகளை ஊக்குவித்து, இந்தியாவின் பொருளாதார வெற்றியின் முக்கிய இயக்கிகளாக அவர்கள் வளர உதவுவதில் பெருமை அடைகிறது." என்று கூறினார்.

2014 இல் தொடங்கப்பட்ட "இவால்வ்" தொடர், 50 க்கும் மேற்பட்ட நகரங்களில் 9,000 க்கும் மேற்பட்ட விஷிவிணி தொழில்முனைவோர்களுக்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான ஒரு மாற்றும் திறனுள்ள மேடையாக உருவெடுத்துள்ளது.

இந்த ஆண்டு, ஆக்சிஸ் பேங்க் டெல்லி, மும்பை, லக்னோ, கொல்கத்தா, சென்னை, ஹைதராபாத், பெங்களூர், கொச்சி, இந்தோர், அகமதாபாத் போன்ற 10 முக்கிய நகரங்கள் முழுவதும் "இவால்வ்" நிகழ்வை ஏற்பாடு செய்கிறது. "இவால்வ்" மூலம், ஆக்சிஸ் பேங்க் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பகிரப்பட்ட வெற்றி வரலாறுகள் மற்றும் புதுமையான யோசனைகளின் ஒரு துடிப்பான சுற்றுச்சூழலை உருவாக்குகின்ற தொழில் தலைவர்கள், நிதி நிபுணர்கள் மற்றும் சக தொழில்முனைவோர்களுடன் பிணையமைப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

ஆக்சிஸ் பேங்க் இன் எம்எஸ்எம்இ கடன் போர்ட்ஃபோலியோ 2020 ஆம் ஆண்டு முதல் ஒரு குறிப்பிடத்தக்க 30% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (சிஏஜிஆர்) அடைந்துள்ளது, இது இந்த முக்கியமான துறையின் நிதி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதன் ஆழ்ந்த உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றது. இந்த ஒட்டுமொத்த எம்எஸ்எம்இ கடன் தொழில்துறையில் ஒரு தற்போதைய 8.6% சந்தை பங்கைக் கொண்ட ஆக்சிஸ் பேங்க், நாடு முழுவதும் எம்எஸ்எம்இ வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஒரு முன்னனி நிறுவனமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இந்தியாவின் எம்எஸ்எம்இகளுக்கான நம்பகமான கூட்டாளியாக அதன் பங்கை மீண்டும் உறுதிப்படுத்துகின்ற வகையில் இந்த ஆற்றல் வாய்ந்த துறையின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்கிற புதுமையான மற்றும் தனிப்பயனாக் கப்பட்ட தீர்வுகளின் ஒரு வரிசையை இந்த வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது. இதில் ஜிஎஸ்தி மற்றும் வங்கி பரிவர்த்தனை தரவுகளைப் பயன்படுத்தும் பணப்பாய்வு அடிப்படையிலான கடன் திட்டங்கள், நியோ போன்ற டிஜிட்டல் தளங்கள் மற்றும் விரைவான மற்றும் தடையற்ற நிதி அணுகலை உறுதி செய்யும் தனிப்பயன் கடன் அனுபவங்கள் அடங்கும் அடங்கும்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# கல்வியைப் புறந்தள்ளிவிட்டு, காவியைப் புகுத்தும் பாசிச பாஜக அரசிற்கு வன்மையான கண்டனங்கள்! மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிக்கை!

சென்னை, 13 ஜனவரி 2025: சமத்துவம், சமதர்மம், சமூகநீதி, மதச்சார்பின்மையை உள்ளடக்கிய திராவிட பண்பாட்டிற்கு நேர் எதிரானது ஆரியப் பண்பாடு. இதை பல்வேறு வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் மொழியியல் வல்லுனர்களும் நிறுவியுள்ளனர். அதுபோலத் தான் தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு நேர் எதிரானது ஒன்றிய பாஜக அரசு முன்வைக்கும் காசியின் ஒற்றை கலாச்சாரம்.

இப்படியிருக்க "காசி தமிழ்ச் சங்கமம்" என்ற பெயரில் 'காசியுடன் தமிழ்நாட்டுக்கு இருக்கும் கலாச்சாரத் தொடர்பை மீண்டும் கொண்டு வருவோம்' என்ற முழக்கத்துடன் கடந்த 2022 ஆண்டு முதல் ஆண்டு தோறும் பல்வேறு நிகழ்ச்சிகளை பாசிச பா.ஜ.க அரசு நடத்தி வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டின் கருபொருளாக 'அகத்திய முனி' என்று வைக்கப் பட்டுள்ளது. இதனையொட்டி நேற்று சென்னையில் அகத்திய முனிவர் நடைப் பயணம் என்ற பெயரில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 4 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர் களுக்கு அகத்தியர் வேடமிட்டு நடைபயணம் நடத்தப் பட்டுள்ளது.

இந்திய முழுவதிற்கும் மதவெறி அரசியலை முன்னிறுத்தி மக்களை பிளவுபடுத்தி, மக்களின் ஒற்றுமையை சிதைத்து வரும் பாஜக தற்போது எதிர்கால தலைமுறையான பள்ளி, கல்லூரி மாணவர்களிடமும் மதவெறி நஞ்சினை விதைக்கத் தொடங்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இந்திய (இந்து) கலாச்சாரத்தை பாதுகாக்கிறோம்;

தேசிய உணர்வை வளர்கிறோம் என்ற பெயரில் தங்களின் இந்துத்துவ அரசியல் செயல் திட்டத்தை மாணவர்களிடம் பரப்பி அவர்களின் அறிவியல், பகுத்தறிவு சிந்தனையை மழுங் கடிக்கும் வேலையை ஆட்சியில் அமர்ந்த நாள் முதல் ஒன்றிய பாஜக அரசு செய்து வருகிறது.

மும்மொழிக் கொள்கை மூலம் இந்தியை திணிக்க முனைவது, சி.பி.எஸ்.சி. யூடத் திட்டத்தில் மனுதர்ம சாஸ்திரத்தை விவரிக்கும் கருத்துப் படங்களும், அறிவியலுக்கு மாறான புராண இதிகாச கருத்துகளை உள்ளடக்கிய பாடங் களை திணிப்பது, உயர் கல்விக்கான நிதியை குறைப்பது-தடுப்பது, மூன்று, ஐந்து, எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு கொண்டு வந்து மாணவர்கள் பள்ளி படிப்பை நிறைவு செய்ய முடியாத வகையில் இடைநிற்றலை உருவாக்கி அனைவருக்கும் கல்வி வழங்கும் வாய்ப்பை சிதைப்பது என அனைத்திற்கும் ஊற்றாக விளங்கும் சமூகநீதி, சமத்துவம், சம வாய்ப்புக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கை 2020யை நடைமுறை படுத்த மாநிலங்களை அப்பட்டமாக அச்சுறுத்தும் நடவடிக்கையாக தமிழ் நாட்டிற்குத் தர வேண்டிய பள்ளிக் கல்வித் திட்டத் திற்கான நிதி ரூ.2,152 கோடியை பறித்து, வேறு மாநிலங்களுக்கு அளித்திருப்பது இதுவரை இந்திய வரலாற்றில் எந்த ஒன்றிய அரசும் மாநிலங்களை அரசியல் ரீதியாக பழி வாங்குவதற்காக கல்விக்கு தடை ஏற்படுத்தும் அளவிற்கு இரக்கமில்லாமல் நடந்துக் கொள்ள வில்லை என கழகத் தலைவர்-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கண்டனத்தை எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

பல்வேறு மாணவர் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் ஒன்றிய பாஜக அரசு தற்போது 'காசி தமிழ்ச் சங்கமம்' என்ற பெயரில் ஆன்மீகத்தின் பெயரால் மாணவர் களிடையே சாதிய, மதவாத உணர்வுகளை விதைக்கும் வஞ்சக செயலில் ஈடுபடத் தொடங்கி இருக்கிறது.

உலக நாடுகள் அனைத்தும் ஏஐ (ஆர்ட்டிபீஷியல் இன்டலிஜென்ஸ்) எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப வளர்ச்சியில் போட்டிப் போட்டுக் கொண்டு முன்னேறி வரும் நிலையில், இங்குள்ள ஒன்றிய பாஜக அரசு கல்வியில் மதத்தைத் திணிக்கும் பிற்போக்குத் தனத்திற்கு கோடிக் கணக்கான பணத்தை செலவழித்து வருகிறது. இதை தந்தை பெரியார் அவர்கள் 1931 ஆம் ஆண்டே பின்வருமாறு விவரிக்கிறார்,

"மதத்திற்கும், உலக இயற்கைக்கும் எப்போதுமே சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில் அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழிமறித்து கண் மூடித்தனமான செயற்கையில் திருப்புவதையே ஜீவநாடியாய் கொண்டிருக்கின்றது. அதனால் மதம் கலந்த படிப்பால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய் விடுகின்றது."

பகுத்தறிவுக் கொள்கைகளை மாணவர்கள் மத்தியில் விதைத்து பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் சமத்துவ சமுதாயத்தை நிறுவிட பல்வேறு திட்டங் களைத் தீட்டி வரும் திராவிட மாடல் நாயகன், கழகத் தலைவர்-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டில், கல்வியை காவிமயமாக்கும் பாஜகவின் இத்தகைய சதி திட்டத்திற்கு திமுக மாணவர் அணி கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது. மேலும், அறிவியலுக்கு எதிரான பாஜகவின் மதவாதப் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் கழகத் தலைவர்-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் இளந்தலைவர்-மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு, தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாணவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்று திமுக மாணவர் அணி தெரிவித்துக் கொள்கிறது.

படி! நன்றாகப்படி! மறந்துவிட்டவைகளை மீண்டும் படிக்கவும், புதிதாக வளரும் இளைய தலைமுறை பழைய வரலாறுகளை அறிந்து கொண்டு நமது பகை எது என்பதைப் புரிந்து கொள்ளவும். - முத்தமிழறிஞர் கலைஞர்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் 11-02-2025 நிகழ்வுகள்

சென்னை 13, பிப்ரவரி 2025: 1. தமிழ்நாட்டிற்கான கல்வி உதவித் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

தூத்துக்குடி எம்.பி. கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்

திமுக நாடாளுமன்றக் கட்சித் தலைவரும் தூத்துக்குடி மக்களவை உறுப்பினருமான கனிமொழி எம்.பி. 11.02.2025 அன்று மக்களவை நேரமில்லா நேரத்தில் தமிழ் நாட்டிற்கு நிலுவையில் உள்ள சமக்ர சிக்ஷா அபியான் நிதியை உடனடியாக விடுவிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உதவித் தொகைகளுக்கான வருமான உச்சவரம்பை இடபிள்யுஎஸ் மாணவர்களை போலவே எட்டு லட்சமாக உயர்த்தவதன் மூலம் விளிம்புநிலை சமூக மக்கள் அதிக அளவில் கல்வி பயில இயலும் என்பதால் ஒன்றிய அரசு அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்பதை விவாதிக்க அவையில் ஒத்திவைப்பு தீர்மானத்தை கனிமொழி எம்.பி அவர்கள் முன்மொழிந்தார்.

2. மீனவர்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. கடுமையான சாடல்.

தொடர்ச்சியாக இலங்கை கடற்படை யினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப் படுவதை தடுக்கக் கோரி திமுக நாடாளு மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் போராட்டம் நடத்தியும், அவையில் குரல் எழுப்பியும் வலியுறுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் ஒன்றிய அரசால் இனி மீனவர்களை காக்க இயல வில்லை என்றால், இருநாட்டு மீனவர்களும் அவர்கள் பிரச்சினைக்கு அவர்களே தீர்வு காணட்டும் என மக்க ளவையில் பேசியதன் விவரம் பின்வருமாறு:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள மீனவர்களின் துயர நிலையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உண்மையில், கடந்த 2024 ஆம் ஆண்டில், 528க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த ஆண்டு, 40 நாட்களுக்குள், 77க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இலங்கை கடற்படையின் மீனவர்களை துன்புறுத்தி, அவர்களின் உடைமைகளை எடுத்துக் கொண்டு, அவர்களைக் காவலில் வைத்தது.

இலங்கை கடற்படை எங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து மக்களைச் சுட்டுக் கொன்றது. 27 ஆம் தேதி, அவர்கள் இரண்டு மீனவர்களைச் சுட்டுக் கொன்றனர். பிப்ரவரி 8 ஆம் தேதி, அவர்கள் 14 க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கருக்கு கடிதம் எழுதினார்.

இன்னும் 216 மீன்பிடி படகுகளும் 97 மீனவர்களும் இலங்கையின் காவலில் உள்ளனர். இந்திய அரசு எதுவும் செய்யவில்லை. அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள இரு மீனவ சமூகங்களும், நவம்பர் 2016 இல் நடந்ததைப் போல, இந்த பிரச்சினையை அவர்களே விவாதித்து முடிக்கு வரும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒன்றிய அரசால் இப்பிரச்சினை தீர்க்க முடியா விட்டால் இருநாட்டு மீனவர்களும் தாங்களாகவே அதைத் தீர்த்துக் கொள்ளட்டும்.

3.கோயம்புத்தூரில் எய்ம்ஸ்?!

திமுக எம்.பி. பி. வில்சன் கேள்வி

தமிழ்நாடு முதலமைச்சர் கோரியபடி, கோயம்புத்தூரில் புதிய எய்ம்ஸ் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஒன்றிய அரசு ஆராய்ந்துள்ளதா என மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி. வில்சன் இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆக்ஸ்பாம் இந்தியா 2022இன் படி, 70 சதவீத கிராமப்புற சமூக சுகாதார மையங்கள் (சிஎச்சி) முழு அளவிலான சிறப்பு மருத்துவர்களை கொண்டிருக்கவில்லை, 83 சதவீதம் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இல்லாமல் செயல்படுகின்றன, 75 சதவீதம் மகப்பேறு மருத்துவர்கள் இல்லாமலும் 82 சதவீதம் மருத்துவர்கள் இல்லாமலும் செயல்படுகின்றன.

நகர்ப்புற சமூக சுகாதார மையங்களும் சிறப்பு மருத்துவர்கள் கிடைப்பதில் 45 சதவீதம் பற்றாக் குறையை எதிர் கொள்கின்றன என்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனாவின் கீழ் வெளிநோயாளர் பராமரிப்பு, நோய் கண்டறிதல் மற்றும் மருந்துகளுக்கான தொகையை காப்பீட்டில் சேர்க்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

4. முத்ரா கடன் முழுமையாக பயன் தருவதை உறுதி செய்க

திமுக எம்.பி. ஆர். கிரிராஜன் வலியுறுத்தல்

முத்ரா கடன் திட்டத்தின் (பிஎம்எம்ஒய்) வரம்பை அரசாங்கம் 20 லட்சமாக உயர்த்திய பிறகு தமிழ்நாட்டில் சிறு மற்றும் குறு தொழில்களுக்கான மூலதன நிதி எளிதாக கிடைக்கப் பெறுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என திமுக மாநிலங்கலவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் தமிழ்நாட்டில் முத்ரா கடந்திட்டத்தின் கீழ் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை, 2022, 2023, 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளில் ஷிஷு, கிஷோர், தருண் மற்றும் தருண் பிளஸ் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட தொகைகளின் விவரங்கள், முத்ரா கடன் திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் தொழில் முனைவோரை திறம்பட சென்றடைவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கடன் பாதுகாப்பை மேம்படுத்த மைக்ரோ யூனிட்களுக்கான கடன் உத்தரவாத நிதி (சிஜிஎஃப்எம்யு) எவ்வாறு பங்களித்துள்ளது போன்ற விவரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

# மதுரவாயல் பகுதியில் வீட்டில் லிப்ட் பேட்டரிகளை திருடிய நபர் கைது. 4 லிப்ட் பேட்டரிகள் பறிமுதல்.



சென்னை 13, பிப்ரவரி 2025: சென்னை, ஆலப்பாக்கம், ஏகாம்பரம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் நாகராஜு, வ/44, த/பெ.சுப்பராயுடு என்பவர் வசித்து வருகிறார். கடந்த 23.01.2025 அன்று மேற்படி நாகராஜு வீட்டிலிருந்து 4 லிப்ட் பேட்டரிகளை அடையாளம் தெரியாத நபர் யாரோ ஒருவர் திருடிச் சென்றுள்ளார். இது குறித்து நாகராஜு தி-4 மதுரவாயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

தி-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப் பட்டடிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன் மேற்படி பேட்டரி திருட்டு வழக்கில் சம்பந்தப் பட்ட ஹரிஷ், வ/20, த/பெ. நாராயணன், கந்தசாமி நகர், 6வது தெரு, மதுரவாயல், செனனை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4 லிப்ட் பேட்டரிகள் பறிமுதல் செய்யப் பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட ஹரிஷ் மீது ஏற்கனவே 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட ஹரிஷ் 10.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



சென்னை 13, பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் 12.02.2025 அன்று புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த 19 பொது மக்களிடம் இருந்து புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின்போது,துணை ஆணையாளர் (நலன் மற்றும் எஸ்டேட்) திருமதி. ஷி. மேகலீனா ஐடன் உடனிருந்தார்.

# சாம்சங் டிவி ப்ளஸ் இந்தியா ஆனது வார்னர் பிரதர்ஸ் டெலிவிஷனிட மிருந்து ஐந்து பிரத்தியேக ஃபாஸ்ட் சானல்களை அறிமுகப்படுத்துகிறது




கோயம்புத்தூர், 13 பிப்ரவரி 2025: சாம்சங்கின் இலவச விளம்பரம் ஆதரவு ஸ்ட்ரீமிங் டிவி (ஃபாஸ்ட்) சேவையான சாம்சங் டிவி ப்ளஸ் ஆனது ஐந்து புதிய ஃபாஸ்ட் சானல்களை சாம்சங் டிவி ப்ளஸ் இந்தியாவில் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்த வார்னர் பிரதர்சுடன் ணைகோர்த்துள்ளது.

இந்த டபிள்யுபி டிவி சானல்களானவை ஸ்ட்ரீமிங் ரசிகர்களுக்கு ப்ரீமியம் கதைகூறலை வழங்குகிறது மற்றும் உயர்தர, இலவச கேளிக்கைக்கான தேவையை பூர்த்தி செய்கிறது. இந்தி நிகழ்ச்சிகளின் வலுவான முனைப்பை கொண்டு இந்த ஃபாஸ்ட் சானல்கள் பிராந்திய மற்றும் நகர்ப்புற ரசிகர்களை ஒருசேர கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சாம்சங் டிவி ப்ளஸ் ஆனது சாம்சங் ஸ்மார்ட் டிவிக்களில் நிறுவப்பட்டு கிடைக்கப்பெறும் ஒரு இலவச ஸ்ட்ரீமிங் சேவையாகும் மற்றும் இது செய்திகள், விளையாட்டுக்கள், கேளிக்கை மற்றும் வேறு நிகழ்ச்சிகள் உட்பட்ட சானல்களின் ஒரு பரந்த வரம்பை வழங்குகிறது.

சாம்சங் டிவி ப்ளஸ் இந்தியாவின் கூட்டாண்மைகள் மற்றும் வர்த்தக அபிவிருத்தியின் தலைவரான குணால் மேத்தா கூறுகையில், "சாம்சங் டிவி ப்ளஸ்க்கு வார்னர் பிரதர்ஸ் டெலிவிஷனை வரவேற்பதில் நாங்கள் மிகவும் குதூகலம் கொள்கிறோம். ஃபாஸ்ட்-ல் ஒரு முன்னனி நிறுவனம் என்ற வகையில் எங்கள் ரசிகர்களுக்காக அதி-உன்னத பொருளடக்கத்தை கொண்டு வருவதில் நாங்கள் உறுதிகொள்கிறோம்.

இக் கூட்டான்மையானது கேளிக்கை விருப்பத்தேர்வுகளை விரிவுபடுத்தும் அதே வேளையில் எங்கள் வியூவர்சுக்கு அதிக விழுமியத்தையும் அணுகலையும் வழங்கும். அது மட்டுமல்லாது விளம்பரதாரர்களுக்கு வாய்ப்புகளையும் வழங்கும்" என்று விளக்கினார்.

ப்ரீமியம் நிகழ்ச்சிகளின் ஒரு வரம்பை வழங்கும் இந்த கீழ்கண்ட சானல்கள் சாம்சங் ஸ்மார்ட் டிவிக்கள் மற்றும் மொபைல் கருவிகளில் வியூவர்சை கவர்ந்திழுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

ஹவுஸ் ஆஃப் கிரைம்: இது கிரைம் ஆர்வலர்களுக்கான ஒரு ஆர்வத்தை தூண்டும் தளமாகும் மற்றும் இது தீவிர டிராமாக்கள் மற்றும் மர்மமான துப்பறியும் தொடர்களை இந்தியில் வழங்கும்.

ஃபூடி ஹப்: சமையல் சாகசகாரர்களுக்கான ஒரு புகலிடம் மற்றும் பிரபலமான உணவு கண்காட்சிகள், செய்முறைகள் மற்றும் உணவு சுற்றுலா பயணங்கள் ஆகியவற்றை இந்தியில் வழங்குகிறது.

வைல்ட் ஃப்ளிக்ஸ்: விலங்கு ராஜ்ஜியத்தின் அற்புதங்களுக்கான உளங்கனிந்த ஒரு நுழைவாயில் மற்றும் மிருககாட்சி வாழ்க்கையின் ஆர்வத்தை தூண்டும் நுண்ணறிவுகளையும் ஆச்சரியமூட்டும் விலங்குகள் மீட்பு கதைகளை இந்தியில் வழங்கும்.

வீல் வோர்ல்ட்: ஆட்டோமொபைல் ஆர்வலர்களுக்கான மயிர்க்கூச்செறியும் பிரிவு மற்றும் இது ஆச்சரியகரமான கார் மற்றும் பைக் கண்காட்சிகள் மற்றும் மிகசிறந்த கேரேஜுகளிலிருந்து வரும் ரெஸ்டோரேஷன் கதைகளை ஆங்கிலத்தில் வழங்கும்.

எக்ஸ்எக்ஸ்ட்ரீம் ஜாப்ஸ்: ரத்த வோட்டத்தை அதிகரிக்க செய்யும் உலகின் மிக துணிச்சலான பணிகள் மற்றும் அசாத்தியமான பணியிடங்கள் மற்றும் அவற்றின் பின்னனியிலுள்ள அஞ்சாநெஞ்சர்கள் ஆகியோரை பற்றி இந்தியில் விவரிக்கும்.

# மியான்மர் ஊழல்: மேலும் 8 இந்தியர்கள் மீட்பு: மொத்த எண்ணிக்கை 133 ஆக உயர்வு



சென்னை, 13 பிப்ரவரி 2025: மியான்மரில் மோசடி நடவடிக்கைகளில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்கும் தொடர்ச்சியான முயற்சியில், மேலும் எட்டு நபர்களை மையவாடியில் இருந்து தாய்லாந்தின் மேசோட்டுக்கு மாற்ற அதிகாரிகள் வெற்றிகரமாக வசதி செய்துள்ளனர். இந்த தனிநபர்கள் 19 வெளிநாட்டினரைக் கொண்ட ஒரு பெரிய குழுவின் ஒரு பகுதியாக இருந்தனர், அவர்கள் இதேபோல் இந்த சுரண்டல் நிலைமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்திய அரசின் உதவியுடன் அவர்கள் பாதுகாப்பாக இந்தியாவுக்கு திரும்புவதை உறுதி செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

இந்த சமீபத்திய மீட்பு இந்த மாத தொடக்கத்தில் 13 இந்திய பிரஜைகளை விடுவிக்க இந்திய தூதரகம் உறுதி செய்த முந்தைய நடவடிக்கையைத் தொடர்ந்து வருகிறது. மொத்தம் 61 வெளிநாட்டினரைக் கொண்ட அந்தக் குழு, இழிபுகழ்பெற்ற ஷ்வே கோ கோ பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் மீட்கப்பட்டவுடன், அவர்களும் அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் செயல்முறையின் ஒரு பகுதியாக மேசோட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

மியான்மரில் உள்ள இந்திய தூதரகம் சமூக ஊடக தளமான எக்ஸ்-ல் ஒரு புதுப்பிப்பைப் பகிர்ந்துள்ளது, "மையவாடி ஊழல் மையங்களில் சிக்கிய மேலும் எட்டு இந்தியர்கள், 19 வெளிநாட்டினர் கொண்ட குழுவில், இன்று தாய்லாந்தின் மே சோட்டுக்கு நாடு கடத்தப்பட்டனர்" இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளில் இருந்து மொத்தம் இந்திய பிரஜைகள் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அந்த அறிக்கை உறுதிப்படுத்தியது.

பிராந்தியத்தில் வேலை வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு எதிராக தூதரகம் தனது கடுமையான எச்சரிக்கையை மீண்டும் வலியுறுத்தியது, இதுபோன்ற மோசடி திட்டங்களில் உள்ள அபாயங்களை வலியுறுத்தியது. மீட்கப்பட்ட நபர்களை திருப்பி அனுப்பும் செயல்முறை தீவிரமாக நடந்து வருவதாகவும், விரைவில் முடிக்கப்படும் என்றும் அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

# மயிலாப்பூர் பகுதியில் வீட்டில் குட்கா பாக்கெட்டுகள் பதுக்கி வைத்து விற்பனை செய்த நபர் கைது. 15 கிலோ குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல்.

சென்னை, 13 பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் சட்ட விரோதமாக குட்கா மற்றும் மாவா விற்பனை செய்து வரும் நபர்களை கண்டு பிடித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக இ-1 மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் 11.02.2025 அன்று காலை, மயிலாப்பூர், ராக்கியப்பன் 2வது சந்தில் கண்காணித்து, அங்குள்ள ஒரு வீட்டில் குட்கா புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்து விற்பனை செய்த அய்யனார், வ/35, த/பெ.சக்திவேலு, சுந்தர கிரமாணி தோட்டம், மயிலாப்பூர், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 15 கிலோ எடை கொண்ட ஹான்ஸ் குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி அய்யனார் விசாரணைக்குப் பின்னர் 11.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# பாதுகாப்பான இணைய தினத்தில், தொழில் வல்லுநர்கள் வேலை மோசடிகளைத் தவிர்க்கவும், ஆன்லைனில் பாதுகாப்பாக இருக்கவும் உதவும் உதவிக்குறிப்புகளை சென்டர் பகிர்ந்து கொள்கிறது

சென்னை, 13 பிப்ரவரி 2025: இந்தியாவில் 10 இல் 8 க்கும் மேற்பட்ட (82%) தொழில் வல்லுநர்கள் 2025 ஆம் ஆண்டில் புதிய வேலையைத் தேடுகிறார்கள் என்று லிங்க்ட்இனின் சமீபத்திய நுகர்வோர் ஆராய்ச்சி தெரிவித்துள்ளது. தொழில் வல்லுநர்கள் செயலில் உள்ள வேலை சந்தையில் செல்லும்போது, ஆன்லைன் வேலை மோசடிகள் பெருகிய முறையில் அதிநவீனமாகி வருகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். போலி ஆட்சேர்ப்பு செய்பவர்கள் முதல் மிகவும் நல்ல-உண்மையான சலுகைகள் வரை, மோசமான நடிகர்கள் வேலை தேடுபவர்களை தனிப்பட்ட தகவல்களைப் பகிரவோ அல்லது பணம் அனுப்பவோ ஏமாற்ற புதிய தந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த பாதுகாப்பான இணைய தினம், ஆன்லைன் வேலை தேடல்களை நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதை மறுபரிசீலனை செய்ய இது ஒரு நல்ல நேரம்-எதைக் கவனிக்க வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும், எப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும். மோசடிகளைக் கண்டறியவும், உங்கள் தகவல்களைப் பாதுகாக்கவும், லிங்க்ட்இன் இல் நம்பிக்கையுடன் வேலை வாய்ப்புகளை வழிநடத்தவும் உதவும் சில அத்தியாவசிய உதவிக்குறிப்புகள் இங்கே உள்ளன.

லிங்க்ட்இன் இந்தியாவின் சட்டம் மற்றும் பொதுக் கொள்கை தலைவர் அதிதி ஜா கூறுகையில், "பாதுகாப்பான இணைய தினம் என்பது இணையம் முழுவதும் பாதுகாப்பை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதைப் பிரதிபலிக்கும் ஒரு வாய்ப்பாகும். லிவீஸீளீமீபீமிஸீ இல், மக்கள் தங்கள் வேலை தேடலில் பாதுகாப்பாக இருக்க உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். வேலை இடுகைகளை எச்சரிக்கையுடன் அணுகுவது மற்றும் விண்ணப்பிப்பதற்கு முன் கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் மதிப்பாய்வு செய்வது அவசியம். இதை ஆதரிப்பதற்காக, வேலை இடுகைகள், நிறுவனங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு செய்பவர்கள் பற்றிய சரிபார்க்கப்பட்ட விவரங்களை முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம் - வேலை தேடுபவர்கள் அதிக நம்பிக்கையுடன் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறோம்.

பாதுகாப்பான வேலை தேடலுக்கான சென்டர் உதவிக் குறிப்புகள்:


நீங்கள் பகிர்வதில் கவனமாக இருங்கள். உங்களிடம் என்ன தனிப்பட்ட தகவல் கேட்கப்படுகிறது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். ஆன்போர்டிங் செயல்முறைக்கு முன் வங்கி விவரங்களை ஒருபோதும் கொடுக்க வேண்டாம்.

சந்தேகத்திற்கிடமான கோரிக்கைகளுக்கு "இல்லை" என்று சொல்லுங்கள். நேர்காணலுக்கு மறைகுறியாக்கப்பட்ட மென்பொருளைப் பதிவிறக்கச் சொல்வது அல்லது சிறிய வேலைக்கு அதிக ஊதியத்துடன் வேலைகளை வழங்குவது போன்ற முறையான முதலாளிகள் செய்யாத தந்திரோபாயங்களை மோசடி செய்பவர்கள் பயன்படுத்தலாம். ஒரு தொலைதூர நேர்காணலுக்குப் பிறகு வேலை வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே முறையான ஒப்பந்தமாகும். ஸ்பேம் மற்றும் பொருத்தமற்ற உள்ளடக்கத்தைப் புகாரளிக்கலாம்.

சிவப்புக் கொடிகளைத் தேடுங்கள். உண்மையாக இருக்க மிகவும் நல்லது அல்லது முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டிய வேலை இடுகைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். பொதுவான மோசடிகளில் மர்ம கடைக்காரர், நிறுவனத்தின் ஆள்மாறாட்டம் அல்லது தனிப்பட்ட உதவியாளர் போன்ற பாத்திரங்கள் அடங்கும். கூடுதலாக, பணம், கிரிப்டோகரன்சி, பரிசு அட்டைகள் அல்லது முதலீடு செய்யுமாறு யாராவது உங்களிடம் கேட்கும்போது எச்சரிக்கையாக இருங்கள்.

உங்கள் அமைப்புகளைப் புதுப்பித்து வைத்திருப்பதை உறுதிசெய்க. உங்கள் கணக்கில் கூடுதல் மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் முகவரியைச் சேர்ப்பது, கடவுச்சொல்லை மறந்துவிட்டால் உங்கள் கணக்கை மீட்டெடுக்க உதவும்.

# மெட்டா இன்ஸ்டாகிராம் டீன் கணக்குகளை இந்தியாவிற்கு விரிவுபடுத்துகிறது, பதின்வயதினர்களுக்கு பாதுகாப்பான ஆன்லைன் அனுபவத்தை வழங்குவதற்காக உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்புகள்



சென்னை, 13 பிப்ரவரி 2025: பாதுகாப்பான இணைய தினத்தைக் குறிக்கும் வகையில், இளம் பயனர்களின் ஆன்லைன் பாதுகாப்பிற்கான தங்கள் உறுதிப்பாட்டை மெட்டா வலுப்படுத்துகிறது, இதன் மூலம் இன்ஸ்டாகிராம் டீன் கணக்குகளை இந்தியாவிற்கு படிப்படியாக விரிவுபடுத்துகிறது. டீன் ஏஜ் கணக்குகள் ஆன்லைனில் பதின்ம வயதினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வயதுக்கு ஏற்ற இடத்தை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்புகளுடன், டீன் அக்கவுண்ட்ஸ் தேவையற்ற தொடர்புகளை கட்டுப்படுத்துகிறது, தனியுரிமை அமைப்புகளை மேம்படுத்துகிறது மற்றும் பெற்றோருக்கு அதிக மேற்பார்வையை வழங்குகிறது, இது எங்கள் இளம் பயனர்களுக்கு பாதுகாப்பான சமூக ஊடக அனுபவத்தை உறுதி செய்கிறது.

டிஜிட்டல் தொடர்புகள் இளம் மனதை வடிவமைக்கும் சகாப்தத்தில், ஆன்லைனில் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாக இருந்ததில்லை. பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இணைய மிரட்டல், தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துதல் மற்றும் தனியுரிமை அபாயங்கள் போன்ற பிரச்சினைகள் குறித்து கவலை தெரிவித்தனர். இன்ஸ்டாகிராமின் புதிய டீன் அக்கவுண்ட்ஸ், 16 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினரை தானாக மிக உயர்ந்த பாதுகாப்பு அமைப்புகளில் வைப்பதன் மூலம் இந்த கவலைகளை நிவர்த்தி செய்கிறது, செய்தி அனுப்புதல், தொடர்புகள் மற்றும் உள்ளடக்க வெளிப்பாடு ஆகியவற்றில் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன, அதே நேரத்தில் டிஜிட்டல் உலகில் பாதுகாப்பாக செல்ல சிறந்த கருவிகள் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. டீன் அக்கவுண்ட்களை இந்தியாவிற்கு விரிவுபடுத்துவது குறித்து, இன்ஸ்டாகிராம் பொதுக் கொள்கையின் இயக்குநர் நடாஷா ஜோக் கூறுகையில், "மெட்டாவில், பாதுகாப்பான மற்றும் அதிக பொறுப்பான டிஜிட்டல் சூழலை உருவாக்குவது முதன்மையானது. இன்ஸ்டாகிராம் டீன் கணக்குகளை இந்தியாவிற்கு விரிவுபடுத்துவதன் மூலம், டீன் வயதினருக்கு பாதுகாப்பான அனுபவத்தை உறுதி செய்யும் அதே வேளையில், பாதுகாப்பை பலப்படுத்துகிறோம், உள்ளடக்கக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துகிறோம், பெற்றோருக்கு அதிகாரம் அளிக்கிறோம்.

கிட்ஸ்ஸ்டாப்ப்ரஸ்,காம் இன் நிறுவனர் மற்றும் சிஇஓ மான்சி ஜவேரி கூறுகையில், "ஆன்லைனில் டீன் கூஜ் பாதுகாப்பு என்பது பெற்றோருக்கு அதிகரித்து வரும் கவலையாக உள்ளது, மேலும் இன்ஸ்டாகிராம் இன் புதிய டீன் அக்கவுண்ட்ஸ் அம்சம் சரியான திசையில் ஒரு படியாகும். யூனியுரிமை அமைப்புகளை வலுப்படுத்துதல், தேவையற்ற தொடர்புகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பெற்றோர் கண்காணிப்புக் கருவிகளைச் சேர்ப்பது ஆகியவை இளம் பயனர்களுக்கு பாதுகாப்பான இடத்தை உருவாக்க உதவும். கிட்ஸ்ஸ்டாப்ப்ரஸ் இல், பொறுப்பான சமூக ஊடகப் பயன்பாடு குறித்து பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கவும், அவர்களின் பதின்ம வயதினருடன் அர்த்தமுள்ள உரையாடல்களைத் தொடங்கவும் உதவுவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

தனிப்பட்ட கணக்குகள்: இயல்பாக, டீன் ஏஜ் கணக்குகள் தனிப்பட்டதாக அமைக்கப்படும், அதாவது புதிய பின்தொடர்பவர்களை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும், பின்தொடர்பவர்கள் அல்லாதவர்கள் அவர்களின் உள்ளடக்கத்தைப் பார்க்கவோ அல்லது தொடர்பு கொள்ளவோ முடியாது. பதிவு செய்யும் போது 16 வயதிற்குட்பட்ட அனைத்து பயனர்களுக்கும் (இருவரும் மற்றும் புதியவர்கள் மற்றும் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு இது பொருந்தும்.

செய்தியிடல் கட்டுப்பாடுகள்: பதின்வயதினர் கடுமையான செய்தியிடல் அமைப்புகள் இயக்கப்பட்டிருப்பதால், அவர்கள் பின்தொடரும் அல்லது ஏற்கனவே தொடர்புள்ளவர்களிடமிருந்து மட்டுமே செய்திகளைப் பெற அனுமதிக்கும்.

உணர்திறன் உள்ளடக்கக் கட்டுப்பாடு: டீன் ஏஜ் பருவத்தினர் தானாக மிகவும் கட்டுப்பாடான அமைப்பில் வைக்கப்படுவார்கள், எக்ஸ்ப்ளோர் மற்றும் ரீல்ஸ் போன்ற பகுதிகளில் உடல் ரீதியான சண்டைகள் அல்லது அழகுசாதன நடைமுறைகளை விளம்பரப்படுத்துதல் போன்ற முக்கியமான உள்ளடக்கத்திற்கு அவர்கள் வெளிப்படுவதைக் கட்டுப்படுத்துவார்கள்.